பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | பங்குனி 07 வெள்ளிக்கிழமை 20.03.2020 | கதிர் 03

## இன்றிரவு 6 மணி முதல் திங்கள் காலை 6 மணி வரை ஊரடங்கு

# 60 மணித்தியாலங்கள் முழு நாடும் முடங்கும்

## புலனாய்வுப் பிரிவுகளுக்கு கைது செய்யும் அதிகாரம்!

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் பரவலை தடுக்க அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து மக்கள் மத்தியில் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தும் வதந்திகளை பரப்பி வரும் நபர்களைக் கைது செய்வதற்குப் புலனாய்வுப் பிரிவுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பக்கம் 07

## கொரோனா வைரஸோடு போராட கோட்டா அரசு பகீரதப்பிரயத்தனம்

கொழும்பு, மார்ச் 20

உலகையே உலுப்பி வரும் ஆள்கொல்லி கொரோனா வைரஸை அடக்குவதற்கான தீவிரப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, அதன் ஒரு படியாக இன்றிரவு முதல் அறுபது மணி நேரம் முழு நாட்டின் அசைவியக்கத்தையுமே நிறுத்தும் வகையில் ஊரடங்கைப் பிறப்பித்துள்ளது.

இன்றிரவு 6 மணி முதல் திங்கட்கிழமை காலை 6 மணிவரை இந்த ஊரடங்கு முழு அளவில் கடுமையக நடைமுறைப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## திங்கள் தாண்டியும் ஊரடங்கு நீடிக்கும்?

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் முதற்கட்டமாக எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ள அரசு, தேவைப்பட்டால் அதனை முழுநாட்டிலுமோ அல்லது பகுதி பகுதியாகப் பிரதேசங்களிலோ தொடர்ந்தும் நீடிப்பதற்கான சாத்தியங்கள் உண்டு என்று அரச உயர் மட் டம் ஒன்று இன்று காலை 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தது.

சனியும் ஞாயிறும் (நாளையும், நாளை மறுதினமும்) ஊரடங்கைப் பயன்படுத்தி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் காணப்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில் ஊரடங்கு நீடிப்பு, பகுதியாக நீடிப்பு, தளர்த்தல் ஆகியன குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அந்த அரச உயர் மட்டம் தெரிவித்தது.

பக்கம் 07

## பருப்புக்கு 'கியூ'



வவுனியா, மார்ச் 20

ஒரு கிலோ கிராம் பருப்பு 65 ரூபாவுக்கும், ரின்மீன் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்யப் படவேண்டும் என ஜனாதிபதி வெளியிட்ட விசேட அறிவிப்பினையடுத்து நாடளாவிய ரீதியில் பொதுமக்களின் கொள்வனவு அதிகரித்துள்ளது.

பக்கம் 07

## கைதிகளின் சிறைக்காலம் காணொலி மூலம் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 20

சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் சிறைக்காலத்தை நீடிப்பதை அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வராமல், காணொலித் தொழிநுட்பத்தின் மூலம் மேற்கொள்ளுமாறு நீதிச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக இன்று முதல் ஒரு வார காலம் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முறை குறித்து விதிமுறைகள் உள்ளடக்கிய விசேட சுற்றறிக்கை ஒன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தக உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம்,

பக்கம் 07

## முல்லைத்தீவில் அதிகரிக்கும் ராணுவ சோதனைச் சாவடிகள்





முல்லைத்தீவு, மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளுக்கு நாள் இராணுவச் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியில் மூன்று இடங்களில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பக்கம் 07

# — எந்த நேரத்திலும் — -அவசர காலச் சட்டம்- நடைமுறைக்கு வரும்?

## அரச உயர் மட்டம் இன்று காலை தீவிர மந்திராலோசனை

கொழும்பு, மார்ச்.20

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முழு நாட்டையும் முடக்கும் விதத்திலான ஊரடங்கு உத்தரவை பிறப்பித்திருக்கும் அரசாங்கம், மேலும் தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக அவரச காலச் சட்டத்தைப் பிறப்பிப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றது.

அரசாங்க உயர் வட்டாரங்கள் அவசர காலச் சட்டத்தைப் பிறப்பிப்பதில் உள்ள சாதக, பாதக அம்சங்கள் குறித்து இன்று காலையில் தீவிர மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தன.

பொதுத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டதன் பின்புலத்தில், பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் அவரச கால விதிகளைப் பிறப்பிப்பதில் உள்ள பெறுபேறுகள், விளைவுகள் குறித்து சட்டமா அதிபர் மற்றும் பாதுகாப்புத் தரப்போடு அரசு உயர் மட்டம் இன்று காலை தொடர் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தமையை அறிய முடிந்தது.

எனினும், இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை அப் பேச்சுக்களின் பெறுபேறு யாது என்பதை அறிய முடியவில்லை.

(உ)

# ஆடைத் தொழிற்சாலை முன் முல்லைத்தீவு மக்கள் எதிர்ப்பு





முல்லைத்தீவு, மார்ச் 20

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்குமாறு அரசு பல்வேறு கோரிக்கைகளை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அரச அலுவலகங்களுக்கும் தனியார்துறை அலுவலகங்களுக்கும் விடுமுறை வழங்குமாறு கூறப்பட்டுள்ளது.

ஆயினும் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் அமைந்திருக்கும் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் இன்று காலை எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இங்கு சுமார் 2000 ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். இன்று காலை ஆடைத் தொழிற்சாலைக்குள் எவரும் செல்லாமல் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலைக்கதிர் Kalaikathir

## வாசகர்களின் கவனத்துக்கு!

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையையடுத்து, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்ததினால், ஊடரங்கு அமுலில் இருக்கும் நாள்களில் 'காலைக்கதிர்' மாலைப்பதிப்பு வெளிவராது என்பதை அறியத் தருகிறோம்.

எனினும் 'காலைக்கதிர்' இலத்திரனியல் பிரதி தினமும் அதிகாலை வேளையில் வழமை போல் உங்கள் கரம் கிட்டும்.

'காலைக்கதிர்' இலத்திரனியல் பிரதியை WhatsApp/ Viber/ மின்னஞ்சல் மூலம் பெற விரும்புபவர்கள் 077 668 7760 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் WhatsApp/ Viber/ மின்னஞ்சலைப் பதிவு செய்வதன் மூலம் தினமும் அதிகாலையில் 'காலைக்கதிர்' இலத்திரனில் பிரதியை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ – ர்

## புதுக்குடியிருப்பில் ஒருவர் துப்பாக்கியுடன் சிக்கினார்

முல்லைத்தீவு, மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் இடைக்காட்டுப் பகுதியில் நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரில் சென்ற விசேட குழு ஒன்று அந்த நபரைக் கைது செய்ததுடன் நாட்டு துப்பாக்கியையும் கைப்பற்றியது.

நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

## அத்தியாவசிய சேவையாக தொலைத்தொடர்பு சேவை


கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், தகவல்களை வழங்கும் தொலைத்தொடர்பாடல் சேவைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுவதால் அதனை அத்தியாவசிய சேவையாக இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு அறிவித்திருக்கிறது.

நாட்டினுள் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இன்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான 8 நாள்கள் சுகாதாரம், போக் குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து அரச மற்றும் தனி யார் துறையினருக்கு 'வீட்டிலிருந்து பணிபுரியும் வாரம்' என்று அரசால் நேற்று வியாழக்கிழமை பிரகடனப்பட்டது.

இந் நிலையிலேயே தொலைத்தொடர்பாடல் சேவைகளை அத்தியாவசிய சேவையாக இலங்கைத் தொலைத் தொடர்பு.

(ஐ)






காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுதல்

நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரகால நிலைமை காரணமாக நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டிய தேவை ஏற்படுமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு அரசிடம் கோரும்.

– இவ்வாறு கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதித் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை அவசர தேவைகளுக்கு ஏற்ப மீண்டும் கூட்டும் அதிகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கு உண்டு.

1978 இல் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் ஆறாவது அத்தியாயத்தின் எழுபதாவது உறுப்புரையின் ஏழாவது உப பிரிவில் இந்த அதிகாரம் ஜனாதிபதிக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதற்குப் பின்னர் அவ்வப்போது பல மாற்றங்கள், திருத்தங்கள், புகுத்துகைகள் இந்த அரசமைப்புக்குச் செய்யப்பட்டுள்ள போதிலும் இந்த 70(7) பிரிவில் எந்த மாற்றமும் கொண்டு வரப்படவில்லை. ஆகையினால் அந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கூட்ட வேண்டிய அவசரம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதி திருப்தி அடைவாராயின் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஒரு பிரகடனம் மூலம் அவர் மீளக் கூட்டலாம். அதற்கான அறிவுறுத்தல், அந்த அறிவுறுத்தல் விடுக்கப்படும் திகதியிலிருந்து மூன்று நாள்களுக்கு உட்படாத ஒரு தினத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதாக இருக்க வேண்டும். அத்தோடு என்ன அவசரத்துக்காக அந்த அமர்வு கூட்டப்படுகின்றதோ அது பூர்த்தியடைந்தவுடன் அல்லது நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்தவுடன் இதில்எதுமுதல்நடக்கின்றதோ அத்தோடு அவ்வாறு கூட்டப்பட்ட நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாகி விடும் என்கின்றது அரசமைப்பின் அந்த 70(7) ஷரத்து.

இப்போது நாடு எதிர்கொண்டிருக்கும் தேசியப் பேரிடர் மிக மிக மோசமான விவகாரம்.

ஆயுதப் போராட்டத்தை இரும்புக் கரம்கொண்டு அடங்குவது வேறு. கண்ணுக்குத் தெரியாமல் மாய்மாலம் காட்டும் வைரஸ் சாம்ராச்சியத்தை நிர்மூலமாக்குவது வேறு.

தனித்து நிறைவேற்றதிகாரத்தை மட்டும் வைத்துக் கொண்டு, அதன் நிர்வாக அலகுகளையும் வைத்துக் கொண்டு கொரோனா போன்ற கொடூர வைரஸை மோதி வென்று விட முடியாது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் போன்ற மிக வலிமையான மேற்குலக நாடுகளே உச்ச மருத்துவ வசதிகளை வைத்துக் கொண்டே கொரோனா என்ற கண்ணுக்குப் புலப்படாத ஆள்கொல்லி வைரஸோடு துவந்த யுத்தம் நடத்த முடியாமல் தடுமாறுகின்றன.

இந்த விடயத்தில் இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகள் கொரோனா ஆள்கொல்லிக்கு முன் வெறும் ஜுஜுபி நிலைதான்.

அத்தகைய மோசமான ஆள்கொல்லி எதிரியை எதிர்கொள்வதற்கு இலங்கை நாடு ஒன்றுபட்டு எழுச்சி கொண்டு பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.

நாட்டின் பல்வேறு இனங்களை, பல்வேறு சமூகங்களை, பல்வேறு பிரிவினரை ஒன்றுபட்டு ஒரு தேசிய சக்தியாக எழுச்சி கொள்ள வைப்பதன் மூலமே ஓரளவுக்கேனும் கொரோனாவின் தீவிரத்தை எதிர்கொள்ளமுடியும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சூழலில் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின்றி இந்த ஒன்றுபட்ட எழுச்சியை உருவாக்குவது துர்லபமே.

உடனடியாக இல்லாவிட்டாலும் கொரோனா எதிர்ப்பை முழு நாட்டினதும் ஒட்டுமொத்த எழுச்சியாக்குவதற்கு ஏதோ ஒரு கட்டத்தில், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டுவது ஜனாதிபதிக்குத் தவிர்க்க முடியாத கட்டாயமாகும் என்பது நிச்சயம்.

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.


இந்த முதியவர் நேற்றுக் காலை செட்டிகுளம் பகுதி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மாட்டுடன் மோதியதிலே விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று மாலை சிகிச்சை பலனின்றி இந்த முதியவர் மரணமடைந்துள்ளார். விபத்தில் செட்டிகுளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் தலைவராக பணிபுரிந்த துரைவீரசிங்கம் (வயது - 68) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்

## கேலிச் சித்திரம்



# கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் வதந்தி பரப்புவோர் குறித்து அவதானமாக இருங்கள்

## நாட்டு மக்களுக்கு பாதுகாப்புச் செயலாளர் வேண்டுகோள்

கொழும்பு,மார்ச்21

கொரோனா வைரஸ் பரவலை தடுக்க அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து மக்கள் மத்தியில் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தும் வதந்திகளை பரப்பி வரும் நபர்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன அனைத்து இலங்கையர்களையும் கோரியுள்ளார்.

அது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த நபர்கள் உள்ளடங்கலாக அனைவரும் வீடுகளில் தரித்திருப்பதன் மூலமும், சுகாதார மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலமும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம்.

நாட்டின் அனைத்து மக்களையும் வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்துள்ள பொறுப்புகளைப் போலவே, பாதுகாப்பு உட்பட்ட அனைத்து அரச நிறுவனங்களும், முப்படை மற்றும் பொலிஸ் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து அனைத்து இலங்கையர்களும் கொரோனா வைரஸ் தக்கத்திலிருந்து 22 மில்லியன் மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலையானது, 2009 ஆம் ஆண்டில் பயங்கரவாதத்தை தோற்கடிக்க முழு நாடும் ஒன்றிணைந்ததற்கு சமமானதாகும்.

கொரோனா வைரஸ் பரவலை எதிர்கொள்ள அனைவரும் வேறுபாடுகளைக் களைந்து அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையாக ஆதரவளிக்க வேண்டும். – என்றார்.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் மையங்கள் செயற்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் சில பகுதிகளில் அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்கு சட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பாதுகாப்புச் செயலாளர், இது மக்களுக்கு வீணான சிரமங்களை ஏற்படுத்த விதிக்கப்பட்ட ஒன்று அல்ல எனவும் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் உயர் ஆபத்து நிறைந்த பகுதிகளில் தேவையற்ற அசைவியக்கங்களையும் நகர்வுகளையும் கட்டுப்படுத்துவதற்காகவே அது பிறப்பிக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

உலகளாவிய தொற்றுநோயாக மாறியுள்ள கொரோனா வைரஸ் பரவுதலை சிறிய தேசம் எவ்வாறு வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது என்பதற்கு இலங்கை உலகிற்கு ஒரு சிறந்த எடுத்துக்



காட்டாக அமைய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பான சமூக வலைத்தளங்களில் தவறான பதிவுகளை வெளியிட வேண்டாம் என எச்சரித்த பாதுகாப்பு செயலாளர் , புலனாய்வு அமைப்புகளுக்கு அத்தகைய பொறுப்பற்ற நபர்கள் அல்லது குழுக்களை கைது செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# நிர்பயா கொலையாளிகள் 4 பேருக்கும் மரண தண்டனை இன்று நிறைவேறியது

புதுடில்லி, மார்ச் 20

புதுடில்லியில் மாணவி நிர்பயாவை ஓடும் பேருந்தில் வைத்துக் கூட்டுப் பாலியல் வல்லுறவு கொண்ட 6 பேரில் நால்வருக்கு இன்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அக்சய் தாக்கூர், வினய் சர்மா, பவன் குப்தா, முகேஷ் சிங் ஆகிய நால்வரும் திஹார் சிறையில் இறக்கும் வரையில் தூக்கிலிடப்பட்டனர்.



2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பது நிர்பயா வழக்கில் மட்டுமே.

23 வயதான இணை மருத்துவத் துறை மாணவியான நிர்பயா (அச்சமற்றவள்) தலைநகர் புதுடில்லியில் ஓடும் பேருந்து ஒன்றில் வைத்து கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இதனால் ஏற்பட்ட காயங்களால் மறுநாள் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சி அலையைக் கிளப்பியது இந்தச் சம்பவம்.

இந்தப் பாலியல் வன்புணர்வு மற்றும் கொலைதொடர்பில் 6 பேரைப்பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் ஒருவரான ராம் சிங் 2013 மார்ச் மாதம் சிறையிலேயே இறந்துபோனார்.

மற்றொரு குற்றவாளி குற்றம் நிகழ்ந்த போது 17 வயதுச் சிறுவன் என்ற அடிப்படையில் மூன்று வருடங்கள் சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்பட்ட பின்னர் 2015ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டான்.

குற்றவாளிகள் நால்வரும் கடந்த சில மாதங்களாகத் தமது தண்டனையை ஆயுள் சிறையாகக் குறைக்கும்படி கேட்டு உச்ச நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். நீதிமன்றம் அவற்றை நிராகரித்துவிட்டது. அதைத் தொடர்ந்து ஜனாதிபதியிடம் கருணை மனுக்களையும் முன்வைத்தனர். அவையும் நிராகரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து மார்ச் 20ஆம் திகதி மரண தண்டனைக்கு நாள் குறிக்கப்பட்டது.

எனினும் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு இரு நாள்களுக்கு முன்பாகவும் அக்சய் தாக்கூர் அடுத்தடுத்து இரு மனுக்களை நீதிமன்றங்களில் தாக்கல் செய்தார். ஆனால் தண்டனைக்குச் சில மணி நேரங்கள் முன்பாக நீதிமன்றம் அவற்றையும் நிராகரித்தது.

தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நிர்பயாவின் தாயார், “மகளின் படத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு கடைசியில் எமக்கு நீதி கிடைத்துவிட்டது என்று அவளுக்குச் சொன்னேன்” என்றார்.

“நீதித்துறையின் மீதான நம்பிக்கை எனக்கு மீளக் கிடைத்திருக்கிறது” என்றார் தந்தையார்.

தூக்குத் தண்டனையையொட்டி திஹார் சிறை வளாகத்தின் வெளியே பொலிஸார் மற்றும் துணை இராணுவத்தினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

சிறையின் வெளியே பதாகைகளுடன் கூடியிருந்த கூட்டத்தினர் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். நீதித்துறைக்கு அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

# வாரச் சந்தைகளுக்கு மூடுவிழா ஆலங்களில் தரிசனத்திற்கு தடை

## தமிழக அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தீவிரம்

சென்னை, மார்ச் 20

கொரோனா அச்சுறுத்தல் எதிரொலியாக தமிழகத்தில் இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை அனைத்து வாரச் சந்தைகளை மூடவும், கோயில்களில் பக்தர்கள் தரிசனத்திற்கு தடை செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் இந்தியாவில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 180 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மார்ச் 31ஆம் திகதி வரை தமிழகத்தில் அனைத்து பாடசாலைகள், கல்லூரிகளையும் மூட ஏற்கனவே தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் எதிரொலியாக நேற்றுத் தமிழக அரசு பிறப்பித்த உத்தரவில், வாரச்சந்தைகளை மூட வேண்டும், தவிர பெரிய புடைவைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், பெரிய நகை கடைகள் ஆகியனவும் மூடப்படவேண்டும். ஆனால் அத்தியாவசிய பொருள்கள் விற்கும் கடைகள், பல்பொருள் அங்காடிகள், காய், கனி கடைகள், மருந்தகங்கள், உணவகங்கள் வழக்கம் போல் திறந்திருக்கும் என்று அறிவித்துள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ராமேஸ்வரம் கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில், தஞ்சை பெரிய கோயில் ஆகிய கோயில்களில் பக்தர்கள் தரிசனத்திற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்கள், மசூதிகள், தேவாலயங்களில் மக்கள் கூடுவதை தவிர்க்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் தனிமைப் படுத்தப்பட்ட சிறப்பு மருத்துவமனைகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

# அடுத்த மாதம் இந்தியாவில் பாதிப்பு மேலும் அதிகரிக்கும்

## மாகாராஷ்டிரா அமைச்சர் கவலை



இந்தியாவிலும்கொரோனா வைரஸ்பரவத்தொடங்கியுள்ள நிலையில் அடுத்த மாதம் நோய்த்தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிட்டுள்ளார் மகாராஷ்டிரா மாநில சுகாதாரத் துறை அமைச்சர் ராஜேஷ் தோபே.

இந்தியாவில் ஏற்கனவே 4 பேர் கொரேனாவின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர். 194 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

உலகம் முழுவதும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின்உயிர்களைக்காவுவாங்கியிருக்கும் கொரோனா ஐரோப்பிய நாடுகளில் மோசமான பாதிப்புக்களைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றது.

‘‘கொரோனா வைரஸ் நோயைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் குறைவான அளவிலேயே பாதிப்பு காணப்படுகிறது. ஆனால் சில வாரங்களில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிரடியாக அதிகரிப்பதை ஏனைய நாடுகளின் அனுபவத்தில் இருந்து அறிய முடிகின்றது.

அடுத்த மாதம்(ஏப்ரல்) நிலைமையை நினைக்கும் போது கவலை அளிக்கிறது. அப்போது கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது” என்றார் ராஜேஷ் தோபே.

இதற்கிடையில் பிற நாடுகளில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்டு வர சிறப்பு விமானங்கள் ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளன. இதன் மூலமாகவும் கொரோனா வைரஸ் நோயாளிகளின்எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

தற்போது வெளிநாட்டினர் அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மூலமே இந்த வைரஸ் இந்தியாவில் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்த வைரஸ் உள்நாட்டை சேர்ந்தவர்களிடம் இருந்தே மற்றவர்களுக்கு பரவும் நிலைக்கு மராட்டியம் செல்வதை தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் தோபே கூறினார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மகாராஷ்டிரா எல்லைகள் மூடப்படுமா? என நிருபர்ஒருவர்கேட்டகேள்விக்கு பதில் அளித்த மந்திரி ராஜேஷ் தோபே, நாங்கள் விரும்புவதும் அதைதான். ஆனால், மக்கள் தாமாக முன்வந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து கொள்ளவேண்டும். அரசின் ஆலோசனைகளை மக்கள் இனியும் மீறினால், நகரங்களை குறிப்பாக மும்பை உள்ளிட்ட முக்கிய நகர எல்லைகளை மூட வேண்டியிருக்கும் என்றார்.

# கொரோனா அல்ல கர்மா கிரண்பேடி தெரிவிப்பு



சென்னை, மார்ச் 20

‘இது கொரோனா அல்ல; கர்மா’ என பாண்டிச்சேரி யூனியன் பிரதேச ஆளுநர் கிரண்பேடி தெரிவித்துள்ளார்.

சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ், உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இந்தியாவிலும் கொரோனா வைரஸ் பரவி வருகிறது. கொரோனா வைரஸ் தொற்று உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கொரோனா குறித்து புதுச்சேரி கவர்னர் தனது சமூக வலைதளத்தில் கணக்கில் ‘கார்ட்டூன்’ ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில், மனிதர்கள் சிறைக் கூண்டுக்குள் முகக் கவசம் அணிந்தபடி சிக்கிக்கொண்டு இருக்க, விலங்குகள் அனைத்தும் சுதந்திரமாகச் சுற்றி வருகின்றன. அதன் கீழ், ’இது கொரோனா அல்ல; கர்மா’ என்று வாசகம் இடம்பெற்றுள்ளது.

அதனை தொடர்ந்து சமூக வலைதளத்தில் கிரண்பேடி வெளியிட்டுள்ள பதிவில், ‘எதை நாம் சாப்பிடுகின்றோம் என்ற பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வது? யாருக்கும் தீங்கு விளைவிக்காததை நாம் தேர்வு செய்யவேண்டும். அகிம்சையைப் பின்பற்றுவது, வார்த்தையில் மட்டுமின்றி, செயலிலும் உணவிலும்தான்’ என குறிப்பிட்டுள்ளார்.

# சீன உயிரிழப்புக்களை தாண்டியது இத்தாலி!

மிலான், மார்ச் 20

உலகை ஆட்டிப் படைத்துவரும் கொரோனா வைரஸின் தாக்கத்தால் இத்தாலியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வேறு எந்த நாட்டினையும்விட அதிகமாகியுள்ளது.

அங்கு ஒரே நாளில் 427 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து இறந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 405ஆக உயர்ந்தது. இது வைரஸ் முதன் முதலில் கண்டறியப்பட்ட சீனாவில் ஏற்பட்ட உயிரிழப்புக்களைவிட அதிகம்.

சீனாவில் இதுவரை 3 ஆயிரத்து 245 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் உத்தியோகபூர்வமான இந்த அறிவிப்பின் மீது சந்தேகங்கள் இருந்தாலும் இதுவரையில் கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரங்களின்படி சீனாவின் உயிரிழப்புக்களை இத்தாலி தாண்டியிருப்பதாகவே உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட நம்பத் தகுந்த நிறுவனங்களும் அறிவித்துள்ளன.




நோய்ப் பரவலைத் தடுப்பதற்காக மக்கள் அனைவரையும் வீடுகளுக்குள் முடங்குமாறு இத்தாலி மார்ச் 12ஆம் திகதியே அறிவித்துவிட்டது. 25ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டிருந்த இந்த உள் முடக்கம் நிலைமையின் வீரியம் கருதி மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

இத்தாலியர்கள் ஒவ்வொருவரையும் மிக மிக அவசியம் என்றால் தவிர வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என்று அரசு கேட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் மத்தியிலும் நோய் பரவும் வேகம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

நாட்டின் வடக்குப் புறமாக உள்ள மூன்று பகுதிகளிலேயே பாதிப்பு மிக அதிகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் வயது மூத்தவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள் என்கின்றன புள்ளி விவரங்கள். உயிரிழந்தவர்களில் அடங்கும் 18 வயதுக்கும் 34 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் அதிகமானவர்கள்கூட வயது மூத்தவர்களுடன் வாழ்ந்தவர்கள் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## கொரோனா அச்சம் காரணமாக கைதிகளை விடுவிக்கிறது அமெ.

நியூயோர்க், மார்ச் 20

சிறைகளில் உள்ள கைதிகளை கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக விடுவிக்கத் தொடங்கியிருக்கிறது அமெரிக்கா.

சிறைக் கைதிகள் மத்தியில் வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நியூயோர்க் நகரம் சிறுகுற்றக் கைதிகளை விடுவித்து வருகின்றது என்று தெரிவித்தார் நகர பிதா. லொஸ்ஏஞ்சல் மற்றும் கிளேவிலாண்ட் மாகாணங்களிலும் ஏற்கனவே நூற்றுக்கணக்கான கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருப்போர் கொரோனா தொற்றுக்குள்ளாவதற்கும் பரப்புவதற்கும் அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு ஆலோசகர்கள் எச்சரித்திருந்தார்கள்.

அமெரிக்காவில் இதுவரையில் 9 ஆயிரத்து 400 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. 155 பேர் உயிரிழந்திருக்கின்றனர். சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்கள் மற்றும் நோய்த் தொற்றுக்கு இலகுவில் ஆட்படக்கூடிய உடல் நிலையுடன் இருப்பவர்கள் ஆகியோரைத் தனித் தனியாக ஆய்வு செய்து இந்த வாரத்தில் தொடர்ந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக நியூயோர்க் நகர பிதா தெரிவித்தார்.

## எறிகணை வீச்சில் 3 குழந்தைகள் லிபியாவில் பரிதாபகரமாகச் சாவு

திரிபோலி, மார்ச் 20

லிபியா நாட்டின் தலைநகர் திரிபோலி தெற்கே அரச படைகளுக்கும் கிளர்ச்சி இராணுவத்துக்கும் இடையில் நடந்த எறிகணை வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 குழந்தைகள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

லிபியாவில் தற்போது ஆட்சியில் இருக்கும் ஐ.நா. சபையின் அங்கீகாரம் பெற்ற அரசை அகற்றித் தலைநகரைக் கைப்பற்றவேண்டும் என்று கிழக்கு பகுதியை சேர்ந்த கிளர்ச்சி இராணுவம் முயற்சி செய்து வருகிறது.

இதற்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் கடுமையான சண்டை நடந்து வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமானோர் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்று உள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 12ம் திகதி சண்டை நிறுத்தத்துக்கு இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. ஆனாலும் சண்டை தொடர்கிறது.

திரிபோலியின் தெற்கே அயின்ஜாரா என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் கண்



மூடித்தனமான குண்டுத் தாக்குதல் நடந்தது. இந்த தாக்குதலில் 3 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தன.

உயிரிழந்த 3 குழந்தைகளும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று ஐ.நா. ஆதரவு பெற்ற அரசின் சுகாதாரத் துறை அமைச்சக தகவல் ஆலோசகர் அமீன் ஹமே தெரிவித்தார்.

இதற்கிடையே சண்டையினால் பாதிக்கப்பட்டுள்ள லிபியாவில் சண்டை நிறுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்துள்ளன. இதை ஐ.நா. ஆதரவு பெற்ற அரசு வரவேற்றுள்ளது.

## ஒலிம்பிக்கிற்கு தயாராகுமாறு வீரர்களுக்கு அழைப்பு

கொரோனா அச்சம் இருந்தாலும் எதிர்வரும் ஜுலை மாதம் தொடங்கவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு தயாராகுமாறு விளையாட்டுவீரர்களுக்கு ஒலிம்பிக் குழு அறிவுறுத்தியுள்ளது.

32ஆவது சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டு போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜுலை 24ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 9ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. ஆனால் கடந்த ஆண்டு டிசெம்பரில் சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் உலகம் முழுமைக்கும் அச்சுறுத்தலாக இருந்து வரும் நிலையில் ஒலிம்பிக் போட்டிகள் பிற்போடப்படலாம் என்கிற எதிர்வு கூறல்களை ஏற்படுத்தின.

இந்த நிலையில், சர்வதேச ஒலிம்பிக் குழுவின் நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் காணொலிக் காட்சி மூலம் ஆலோசனையில் ஈடுபட்டனர். இதில் ஒலிம்பிக் போட்டி நடைபெற 4 மாதங்கள் உள்ள சூழலில், போட்டியை நிறுத்துவது அல்லது பிற்போடுவது குறித்து இப்போதே முடிவு செய்வது அவசரப்படுவதாக அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதனால் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள ஏதுவாகத் தயாராகும்படி விளையாட்டு வீரர்களை அறிவுறுத்தியுள்ளது குழு.

ஒலிம்பிக் போட்டி நிறுத்தப்பட்டால் ஜப்பானுக்கு ஏறக்குறைய ரூ. 97 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது. எனவே 56 ஆண்டுகளுக்கு பிறகு கிடைத்து இருக்கும் ஒலிம்பிக் வாய்ப்பை நழுவவிட்டு விடக்கூடாது என்பதில் ஜப்பான் அரசு எல்லாவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஒலிம்பிக் தீபம் கிரீஸ் நாட்டின் விளையாட்டு அமைச்சரிடம் இருந்து ஜப்பானின் முன்னாள் நீச்சல் வீராங்கனை இமோட்டோ நவோக் கோவிடம் ஒப்படைக்கப்பட்டது. தனி விமானம் மூலம் அந்த ஒலிம்பிக் தீபம் டோக்கியோ நகருக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## அமெரிக்கப் பத்திரிகையாளர்களை சீனாவை விட்டு வெளியேற்ற முடிவு

சீனாவில் பணியாற்றும் அமெரிக்கப் பத்திரிகையாளர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற சீன அரசு தீர்மானித்துள்ளது.

கொரோனா பாதிப்பைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து கொண்டு சீன பத்திரிகையாளர்கள் பணிபுரிவதற்கு டிரம்ப் நிர்வாகம் சார்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக சீனப் பத்திரிகையாளர்கள் எண்ணிக்கையை குறைத்து டிரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டது.

மேலும், அமெரிக்காவில் உள்ள சீன பத்திரிகை நிறுவனங்கள், அந்த நாட்டில் உள்ள தங்களது பணியாளர்கள், சொத்துக்கள் பற்றிய விவரங்களை தெரிவிக்க வேண்டிய நிலையையும் உருவாக்கியது. இது சீனாவுக்கு அதிர்ச்சியை அளித்தது.

இதற்கு பதிலடி கொடுக்கிற விதத்தில் தங்கள் நாட்டில் உள்ள அமெரிக்காவின் தி நியூயார்க் டைம்ஸ், தி வாஷிங்டன் போஸ்ட், தி வால் ஸ்ட்ரீட் ஜேர்னல் ஆகிய பத்திரிகைகளை சேர்ந்த பத்திரிகையாளர்களை வெளியேற்ற சீனா முடிவு எடுத்துள்ளது.

சீனாவின் முடிவு குறித்து அமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோ வேதனை தெரிவித்தார். "சீனாவின் முடிவு துரதிர்ஷ்டவசமானது. இதை நாங்கள் எதிர்பார்த்தோம். சீனா அதை மறுபரிசீலனை செய்யும் என்று நம்புகிறேன்" என குறிப்பிட்டார்.

வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் கருத்து தெரிவிக்கையில், "சீனா மற்றும் ஹொங்காங்கில் இருந்து அமெரிக்க பத்திரிகையாளர்களை வெளியேற்ற சீன கம்யூனிஸ்டு தலைவர்கள் முடிவு எடுத்து இருக்கிறார்கள். இது சீனாவைப் பற்றிய உண்மையான தகவல்கள் கிடைக்காமல் மக்களை தவிக்க விடுகிற நிலையைத்தான் ஏற்படுத்தும். இதை சீனா மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்" என கூறியது.

அமெரிக்க குடியரசு கட்சி எம்.பி. மைக்கேல் மேக்கவுலும் சீனாவின் முடிவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். "சீனாவில் பத்திரிகை சுதந்திரத்துக்கு விழுந்துள்ள அடி இது" என அவர் கூறி உள்ளார்.

## கொரோனாவின் தாக்கம் குறித்து ஆபிரிக்கா விழித்தெழவேண்டும்

உலகம் முழுவதையும் ஆட்டிப்படைத்துவரும் கொரோனா வைரஸ் குறித்து ஆபிரிக்கா விழித்துக்கொள்ள வேண்டும் என்று எச்சரித்துள்ளார் உலக சுகாதார நிறுவனத் தலைவர்.

இந்தக் கொள்ளை நோயால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளை எதிர்கொள்வதற்கு ஆபிரிக்கா விரைவில் தயாராக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வைரஸின் பரவல் எவ்வளவு வேகமாக இருந்தது என்பதை ஏனைய நாடுகளின் அனுபவங்களில் இருந்து ஆபிரிக்கக் கண்டம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் டெட்ரோஸ் அட்கானன் வலியுறுத்தினார்.

ஆபிரிக்க நாடுகளில் இதுவரையில் குறைந்தளவான எண்ணிக்கையானோருக்கே (640) நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என்று நிம்மதியாக இருந்துவிட முடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

கொரோனா ஆபிரிக்காவில் வேகமாகப் பரவ ஆரம்பித்தால் அங்குள்ள பலவீனமான மருத்துவப் பொறிமுறையால் அதனைத் தாங்கிக்கொள்ள முடியாது, குறிப்பாக நகரப் பகுதிகளில் நிலைமை மிக மோசமானதாக மாறிவிடும் என்று எச்சரிக்கிறார்கள் சுகாதாரத்துறை நிபுணர்கள்.

நோய்த் தாக்கம் காரணமாக ஆபிரிக்காவில் ஏற்கனவே 16 பேர் உயிரிழந்துள்ளனர். இதைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிவிட்டன. பொதுமக்கள் கூட்டம் கூடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன. எனினும் இன்னும் மூர்க்கமான, தீவிரமான நடவடிக்கைகளின் அவசியத்தையே உலக சுகாதார நிறுவனத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

## கடற்படைச் சிப்பாய் காயம்!

திருமலை, மார்ச் 20

மூதூர் பச்சநூர் வாய்க்காலில் ஓட்டோ தடம்புரண்டு குடை சாய்ந்ததில் அதில் பயணித்த கடற்படைச் சிப்பாயொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் சேருநுவர பகுதியைச் சேர்ந்த பிரதீப்குமார (வயது – 35) எனும் கடற்படைச் சிப்பாயே காயமடைந்துள்ளார்.

இவர் சேருநுவர பகுதியிலிருந்து மூதூர் நோக்கி ஓட்டோவில் பயணம் செய்த போதே அது பாதையை விட்டு விலகி வாய்க்காலில் தடம்புரண்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சுற்றுலாப் பயணிகள் நாடு திரும்ப ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 20

இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் தங்களின் சொந்த நாடுகளுக்கு மீள செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹெஷான் சுமனசேகர இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக நாட்டுக்கு வருகை தந்துள்ள 38 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் நாட்டில் தங்கியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் தங்களின் சொந்த நாடுகளுக்கு திரும்புவதற்காக எமிரேட்ஸ் நிறுவனம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நாளாந்தம் 4 தடவைகள் விமான சேவைகளை முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து டுபாய் வரை இந்த விமான சேவை முன்னெடுக்கப்படுவதாகவும் ஹெஷான் சுமனசேகர குறிப்பிட்டார்.

தெரிவு செய்யப்பட்டுள்ள சில நாடுகளுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவை தனது விமான போக்குவரத்தை முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

# மீன்ரின், பருப்புக்கு முல்லைத்தீவில் கடும் தட்டுப்பாடு!





முல்லைத்தீவு, மார்ச் 20

கோட்டபாய அரசால் பருப்பு, மீன்ரின் என்பவற்றுக்கான விலைகுறைப்பு அறிவிக்கப்பட்டதன் எதிரொலியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் லங்கா சதொச, காகில்ஸ் பூட் சிற்றி, மொத்த வியாபார நிலையங்கள் மற்றும் ஏனைய வியாபார நிலையங்களில் பருப்பு மற்றும் மீன்ரின் இல்லாத நிலை காணப்படுகின்றது.

நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலில் மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ள நிலையில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக மக்கள் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

விலை குறைப்பு அறிவிக்கப்பட்டதை அடுத்து பலர் குறித்த பருப்பு, மீன்ரின் ஆகியவற்றை அதிக அளவில் கொள்வனவு செய்து சென்றுள்ள நிலையில் அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நாளாந்த கூலித் தொழிலாளர்கள் இவற்றைக் கொள்வனவு செய்ய முடியாது இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தோடு விலை குறைப்பின் பின் வர்த்தகர்களும் பருப்பு மற்றும் மீன்ரின் போன்ற பொருள்களை பதுக்கியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது. (ஐ)

## ஈ.பி.டி.பியின் வேட்புமனு மட்டக்களப்பில் நிராகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேட்பு மனுத்தாக்கலில் ஈ.பி.டி.பி. உட்பட மூன்று கட்சிகளினதும் மூன்று அரசியல் கட்சிகளினதும் வேட்பு மனுக்கல் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கல் செய்யும் நிகழ்வுக்கு பின்னர் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பு நடைபெற்றதையடுத்து இந்த ஊடக சந்திப்பு நடைபெற்றது.

19 அரசியல் கட்சிகளும் 25 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளன எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

பொதுத் தேர்தல் 2020 இற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 அரசியல் கட்சிகளினதும், 3 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, மௌபிம ஜனதா பக்ஸ, ஜனசத பெரமுன ஆகிய 3 அரசியல் கட்சிகளினதும், அரசரத்தினம் யுகேந்திரன், பி. மதிமேனன், மு.அ. நிசார்தீன் ஆகியோர் தலைமையிலான 3 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களுமே நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் 16 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், 22 சுயேச்சைக் குழுக்களுமாக 38 குழுக்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளன.

வேட்பு மனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியப் பிரமாணம் சமர்ப்பிக்கப்படாமை, வேட்பு மனுவில் எட்டு அபேட்சகர்களது பெயர் குறிப்பிடப்பட வேண்டியவிடத்து 7 அபேட்சகர்களது பெயர்கள் மாத்திரம் குறிப்பிட்டமை போன்ற காரணங்களுக்காகவே இவ் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

## அதிக விலைக்கு முகக் கவசங்கள் விற்போருக்குக் கடும் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20

அதிக விலைக்கு முகக் கவசங்களை விற்பனை செய்யும் அல்லது பதுக்கும் நபர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மீளப்பயன்படுத்த முடியாத சாதாரண முகக்கவசம் 50 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. என்–95 வகை முகக் கவசத்துக்கு 325 ரூபா உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைகளை விட அதிகரித்த விலையில் முகக் கவசங்களை விற்பனை செய்யும் மருந்தகங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும் என தேசிய மருந்தகங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

முகக்கவசங்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் அல்லது அவற்றை பதுக்கும் நபர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் கமல் ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## ஆம்பாறை மாவட்டத்தில் 58 குழுக்கள் வேட்புமனு

கொழும்பு, மார்ச் 20

பொதுத் தேர்தலில் அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக பதியப்பட்ட 20 கட்சிகள் 38 சுயேச்சைக் குழுக்கள் உட்பட 58 அரசியல் குழுக்களின் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதில் 4 சுயேச்சைக் குழுக்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமையுடன் இதுவரை 7 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என அம்பாறை மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான டி.எம்.எல்.பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் 5 இலட்சத்து 13 ஆயிரத்து 979 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்கள் வாக்களிக்கவென 525 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளமையுடன், அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# மனிதநேய பணியாளர்கள் தாக்கப்பட்டமை மானுடத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

## வன்மையாக கண்டிக்கிறது சைவ மகா சபை

யாழ்ப்பாணம், மார்ச் 20

அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் வைத்தியர் பரா.நந்தகுமார், சைவ மகா சபையின் உப தலைவர்களில் ஒருவரான த.சிவரூபன் ஆகியோர் ஐஸ்கிறீம் விற்பனை நிலைய பணி யாளர்களால் திட்டமிட்டு தாக்கப்பட்ட சம்பவத்தை அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

உலகை உலுக்கிக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை விழிப்புணர்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வைத்தியர். பரா.நந்தகுமார் மற்றும் த.சிவரூபன் ஆகியோர் தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை கண்டித்து சைவ மகா சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸ் காரணமாக இன்று உலக மக்கள் அனைவரும் அச்சத்தில் உறைந்திருக்கின்ற நேரத்தில் எமது தேசத்திலும் இதன் தாக்கம் மக்களை பயப்பீதிக்குள்ளாக்கியுள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அன்றாடம் அதிகரித்துச் செல்கின்றது.

இதில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வில் ஈடுபட்டிருந்த வைத்தியர் நந்தகுமார் மற்றும் சிவரூபன் ஆகியோர் திட்டமிட்டு தாக்கப்பட்டிருக்கின்றனர். றியோ ஐஸ்கிறீம் விற்பனை நிலையப் பணியாளர்களால் இத்தாக்குதல் அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

ஆன்மீக, சமூக, மனிதநேயப் பணியாளர்களான இவர்கள் தாக்கப்பட்டுள்ளமை மானுடத்தை நேசிக்கும் அனைவருக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்.

மக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வைத்தியர் ஒருவரை பொது வெளியில் தாக்கியமை குறித்து தாக்குதலில் ஈடுபட்டவர்களும் அதை தூண்டியவர்களும் வெட்கப்படவேண்டும்.

வைத்தியர். சிறு வயதில் இருந்தே ஆன் மீக, சமூக, மனிதநேயப் பணிகளில் தன்னை அர்ப் பணிப்புடன் ஈடுபடுத்தி வருகின்றார். தனியே ஒரு மருத் துவனாக இல்லாமல் எமது தேசத்தின் தொன்மைகளை – சைவத் தமிழ்ப் பண்பாடுகளை – மீட்டெடுக்கும் பெரும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றார். இவரது நண்பனான சிவரூபனும் இதே பணிகளில் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

அன்பே சிவம் என்ற தாரக மந்திரத்திற்கு இணங்க மனிதத்தை நேசிக்கும் இறை சிவனின் தொண்டர்களான இவர்கள் மீதான தாக்குதலானது எமது தேசத்தில் மனிதாபிமானம் செத்துக்கொண்டிருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

பொதுமக்களின் மீது எத்தகைய அக்கறையோ மனிதாபிமானமோ இன்றி, வியாபாரத்திலும் பணம் உழைப்பதிலும் குறியாக இருப்போரின் இந்தத் தாக்குதலை அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாக கண்டிக்கின்றது – என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## புலனாய்வுப் பிரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டிலிருந்துவருகை தந்தநபர்கள்உள்ளடங்களாக அனைவரும் வீடுகளில் தரித்திருப்பதன் மூலமும், சுகாதார மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலமும் கொரோனாவைரஸ்பரவலைக் கட்டுப்படுத்தும் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் –

நாட்டின் அனைத்து மக்களையும்வைரஸ்தாக்கத்தில் இருந்து பாதுகாக்க ஜனாதிபதி கோட்டாபய எடுத்துள்ளபொறுப்புகளைப்போலவே, பாதுகாப்பு உட்பட்ட அனைத்து அரச நிறுவனங்களும், முப்படை மற்றும் பொலிஸ் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து அனைத்து இலங்கையர்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து 22 மில்லியன் மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலையானது, 2009 ஆம் ஆண்டில் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முழு நாடும் ஒன்றிணைந்ததற்குச் சமமானதாகும். கொரோனா வைரஸ் பரவலை எதிர்கொள்ள அனைவரும் வேறுபாடுகளைக் களைந்து அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முழுமையாக ஆதரவளிக்கவேண்டும்.

ஊரடங்குச் சட்டம் மக்களுக்கு வீணான சிரமங்களை ஏற்படுத்த விதிக்கப்பட்ட ஒன்று அல்ல எனவும் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் உயர் ஆபத்து நிறைந்த பகுதியின் தேவையற்ற நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே பிறப்பிக்கப்பட்டது.

உலகளாவிய தொற்றுநோயாகமாறியுள்ளகொரோனா வைரஸ்பரவுவலைசிறியதேசம் எவ்வாறுவெற்றிகரமாகதடுத்து நிறுத்தியதுஎன்பதற்குஇலங்கை உலகுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமையவேண்டும்.

வைரஸ்பரவுவதைக்கட்டுப்படுத்தும் அரசின் முயற்சிகள் தொடர்பான சமூக வலைத்தளங்களில் தவறான பதிவுகளை வெளியிடவேண்டாம். புலனாய்வு அமைப்புகளுக்கு அத்தகைய பொறுப்பற்ற நபர்கள் அல்லது குழுக்களைக் கைதுசெய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது – என்றார். (மற்றொருசெய்தி 3 ஆம் பக்கத்தில்)

## திங்கள் தாண்டியும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறுபது மணி நேரம் முடிவில் ஊரடங்கு நீக்கப்பட்டாலும் குறுகிய நேர முன்னறிவித்தலோடு அது மீளவும் நடைமுறைப்படுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகின்றது.

மக்கள் தமது அன்றாடப் பாவனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும் –

திங்கட்கிழமை தமக்கு வழங்கப்படும் சம்பளங்களை அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்குச் சென்று பெறவும் –

வசதியாக திங்களன்று குறைந்தது மூன்று முதல் நான்கு மணி நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (உ)

## பருப்புக்கு ‘கியூ’

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்து வவுனியாவில் அமைந்துள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் வரிசையில் நின்று ரின்மீன் மற்றும் பருப்பு கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர்.

சில வர்த்தக நிலையங்களில் ரின்மீன் இருப்பு நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மொத்த வியாபார நிலையங்களுக்கு சென்று சில்லறை வியாபாரிகளுக்கு பொருள்களை விநியோகம் செய்யுமாறும் அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளனர். (ஐ)

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாங்குளம் – முல்லைத்தீவு வீதியில் கரிப்பட்டமுறிப்பு பகுதியில் ஒரு சோதனைச் சாவடியும் கருவேலங்கண்டல் பகுதியில் மற்றுமொரு சோதனைச் சாவடியும், முள்ளியவளை தேக்கங்காடு பகுதியில் ஒரு சோதனைச் சாவடியுமாக மூன்று சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கருவேலன் கண்டல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடியில் அந்த வீதியூடாக பயணிக்கின்ற பயணிகளின் பெயர், முகவரி ,அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பன பதியப்பட்டு பயணிப்பவர்களிடமிருந்து கையொப்பம் பெறும் நடவடிக்கையையும் இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் செயல்பாடுகள் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

அதேபோன்று முல்லைத்தீவு – பரந்தன் வீதியில் மந்துவில் மற்றும் விசுவமடு பகுதிகளிலும் ஒட்டுசுட்டான் – புதுக்குடியிருப்பு வீதியிலும் மன்னாகண்டல் பகுதியில் என நாளுக்கு நாள் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

## கைதிகளின் சிறைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் மற்றும் தொழில் நிர்ணயச் சபைகள் நேற்று முதல் 27 வரையான வழக்கு நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அவசர மற்றும் அத்தியாவசியம் என நீதிபதிகளினால் தீர்மானிக்கப்படும் வழக்குகள் தவிர்ந்த வேறு எந்தவொரு வழக்கையும் திறந்த நீதிமன்றத்துக்கு அழைக்கவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எடுத்துக் கொண்ட அனைத்து வழக்குகளும் வேறு தினங்களில் அழைக்கப்படுவதுடன், பிணை பெற்றுக் கொள் வதற்கான பிணை கோரிக்கை கள் மட்டும் வழமையான முறையில் இடம் பெறும். நீதிபதியொருவர் மிகவும் அவசிய தேவையொன்றின் காரணமாக வழக்கொன்றை அழைக்கக் கோரிக்கை விடுத்தால் முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் மனு ஒன்றின் ஊடாகச் செய்யப்படும் கோரிக்கை மட்டும் கவனத்திற் கொள்ளப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேபோன்றுசிறைச்சாலையில் உள்ள கைதிகளின் சிறைக்காலத்தை நீடித்தல் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வராது, காணொலித் தொழிநுட்பத்தின் மூலம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் பிணை வழங்குதல் தொடர்பாக உள்ள ஏற்பாடுகளை முடியுமானளவு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், அதற்காக நீதிபதிகள் அந்தப் பொலிஸ் அதிகார பிரதேசத்தில் பொலிஸூடன் உரிய ஒருங்கிணைப்பை பேண வேண்டும்.

மக்கள் ஒன்றுகூடுவதை முடியுமானளவு குறைத்து கொரோனா வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதை இலக்காகக் கொண்டு நீதிச் சேவைகள் ஆணைக்குழு இந்த சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. (ஐ)

# எனது மகனுக்கு விசேட சலுகை எதுவுமே வழங்கப்படவில்லை

## மறுக்கின்றார் மஹிந்த அமரவீர

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து வந்த எனது மகனுக்கு, எந்ததொரு விசேட சலுகைகளும் வழங்கப்படவில்லை. சாதாரண மக்களை போன்றே தியத்தலாவ தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளாரென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து வருகை தந்த மஹிந்த அமரவீரவின் மகனுக்கு மாத்திரம் விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகிய செய்திக்கு மறுப்பு தெரிவித்த அவர், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் குறித்து மஹிந்த அமரவீர மேலும் கூறியுள்ளதாவது: –

என் மகன், ஐக்கிய இராச்சியத்தில் இருந்து சிறப்பு விமானமொன்றின் ஊடாக நாட்டை வந்தடைந்தார் எனவும் அதனைத் தொடர்ந்து தியத்தலாவ தடுப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்ட எனது மகனுக்குச் சிறப்பு சலுகைகள் வழங்கப்படுவதாகவும் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளதை நான் கண்டேன். அவை உண்மைக்குப் புறம்பானவை.

எனது மகன்,எமிரேட்ஸ் விமானம் மூலமே இலங்கைக்கு வந்தார். இலங்கைக்கு வருவோரை தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லும் சாதாரண பேருந்திலேயே மற்றையவர்களுடன் இணைந்து, அவரும் தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## சுகாதார அமைச்சர் கோரிக்கை

கொரோனா வைரஸ் தொற்று படிப்படியாக அதிகரித்து வருவதால், நாட்டு மக்கள் பொறுப்புடனும் அவதானத்துடனும் செயற்படவேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய கொரோனா தொற்றை தடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள செயற்பாட்டு மத்திய நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் – அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். தேவையற்ற பயணங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கருத்துரைக்கையில் –

இந்தியாவில் யாத்திரையை மேற்கொண்டு நாடு திரும்பும் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படவேண்டும். கடந்த முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் 1,500 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் தொடர்பான விவரங்கள் பெறப்பட்டுள்ளன. சுயமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு இவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# கொரோனாவுக்கு சிகிச்சையளிப்பதற்கு வெலிக்கந்தை வைத்தியசாலை தயார்






கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கும் நிலையமாக வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலை சீரமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நோயாளிகளுக்கு தற்போது கொழும்பு தொற்று நோயியல் (ஐடிஎச்) வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையிலும் கோரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்பு பங்கு சந்தையின் நடவடிக்கைகள் இடநிறுத்தம்



கொழும்பு பங்கு சந்தையின் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு பங்குச்சந்தையின் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்துள்ளமையால் இவ்வாறு பங்கு சந்தையின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய அனைத்து பங்குகளின் மொத்த விலைச்சுட்டெண் 2.61% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கொழும்பு பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் இவ்வாறு தொடர்ச்சியாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலை ஒத்திவைத்தமையை வரவேற்கிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, மார்ச் 20

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நாட்டு மக்கள் பெரிதும் அச்சத்தில் இருக்கின்ற நிலையில், பொதுத் தேர்தலை பிற்போடுவதற்குத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதை வரவேற்கிறார் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் மக்களுக்கு அரசாங்கம் நிவாரணப் பொதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

உலகளாவிய ரீதியில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நாட்டு மக்கள் பெரிதும் அச்சத்தில் இருக்கின்ற நிலையில் பொதுத் தேர்தலை பிற்போடுவதற்குத் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதை வரவேற்பதுடன் நாட்டு மக்களின் நலன் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தியதற்காக ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் ஆணைக்குழுவினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த தீர்மானம் முன்னரே எடுக்கப்பட்டிருந்க வேண்டும். இருந்தபோதிலும் தேர்தல் ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது. மக்களுக்கான பலத்தைப் பெற்றுக் கொடுப்பது அரசின் கடமையாகும். கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூட்டோ அந்நாட்டு மக்களுக்கு நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு நிவாரணப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்துள்ளார். இதேபோன்ற நிவாரணப் பொதிகள் எம் நாட்டு மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

தற்போது வைரஸ் பரவல் காரணமாக தொற்று நீக்கம் மற்றும் ஆட்புலங்கங்களைக் குறைத்தல், ஊரடங்குச் சட்டம் என்பன அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலைமைகளில் , இந்த இடைப்பட்டக் காலத்திற்குள் மக்களுக்கான நிவாரணப் பொதிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

உலகச் சந்தையில் எரிபொருள் விலை பாரிய அளவில் குறைந்துள்ள போதிலும் அரசாங்கம் மேலும் ஒரு வருடத்திற்கு எரிபொருள் விலையை குறைக்கப்போவதில்லை என்று அறிவித்திருக்கின்றது. ஏன் இவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ளது என்பது தொடர்பில் எமக்கு ஒன்றும் புரியவில்லை.தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தலை பிற்போட்டுள்ள நிலையில் உடனனே நாடாளுமன்றத்தைக் கூட்டி , நாட்டில் ஏபட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் கலந்துரையாடி மக்களுக்கான விசேட நிவாரணப் பொதியைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும். இதற்கான நாங்கள் எமது முழு ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுக்கத் தயாராகவுள்ளோம்.

இதேவேளை, வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அனைத்து தரப்பினர் மநாடு ஒன்றை நடத்த வேண்டும். கட்சி ,இன,மத, மொழி என்ற பேதமின்றி அனைவரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு, தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து எமது நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாத்துக் கொள்ளவது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும். வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்த ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாம் காலதாமதமாகவே தீர்மானங்களை எடுக்கின்றோம். இவ்வறான நிலையிலே அரசியல் மற்றும் தேர்தல் செயற்பாடுகளை புறந்தள்ளி நாட்டு மக்களின் நலன் தொடர்பிலே நாம் அக்க றைக் கொள்ளவேண்டும்.– என்றார். (ஐ)

## தேர்தல் திணைக்களத்தில் கடற்படை தொற்று நீக்கல்

கொழும்பு, மார்ச்.20

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று அச்சுறுத்தலை அடுத்து, அதன் பரவலைத் தடுக்கும் வகையில் தலைநகர் கொழும்பின் பல பாகங்களிலும் தொற்று நீக்கல் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் திணைக்களத்தில் கடற்படையினர் தொற்றுநீக்கல்நடவடிக்கையில்ஈடுபட்டனர்.











இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2020 இல் வெளியிடப்பெற்றது.